# இலங்கையின் தற்கால அரசியல் கட்சிகளும் ஜனநாயக முறையும்

[1]Monika Luxmi L. & [2]Saira Banu F.

Department of political science, South Eastern University of Sri Lanka

**ஆய்வுச்சுருக்கம்**

மக்கள் சமூக, கலாசார பொருளாதார மற்றும் அரசியல் போன்ற பொதுவான நோக்கங்களுக்காக கூட்டாகச் சேர்ந்து பெரிய அமைப்புக்களை ஏற்படுத்தி செயல்பட்டு வருகின்றனர். இதன்படி கட்சி என்பதும் கூட்டு வாழ்கைக்கான அமைப்பேயாகும். 19ம் நூற்றாண்டில் ஐரோப்பா, வட அமெரிக்கா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளில் தான் முதன் முதலாக கட்சீயும் கட்சி அமைப்புக்களும் ஏற்படுத்தப்பட்டன. அரசியல் கட்சிகள் குடியாட்சிமுறை பின்பற்றப்படும் நாட்டுக்கு அவசியமானவை. தற்போதைய உலகில் குடியாட்சிகள் பிரதிநிதித்துவ தன்மையை கொண்டிருக்கின்றன. இந்தவகையில் குடியாட்சி அமைப்புக்களில் அரசியல் கட்சிகள் மக்களுக்கு அரசியலில் ஆர்வத்தை ஊட்டி பங்கேற்க கற்றுத்தருகின்றனர்.அரசாங்கம் அல்லது தேர்ந்தெடுக்கப்படும் அமைப்புகளுக்கு அரசியல் கட்சிகள் என்பது மிகவும் அவசியமானவை. மக்கள் மற்றும் அரசாங்கம், வாக்காளர்கள் மற்றும் பிரதிநிதித்துவ நிறுவனங்களுக்கிடையே ஒரு உறவை ஏற்படுத்தும் பாலமாக அரசியல் கட்சிகள் செயற்படுகின்றன. ஒரு அரசியல் முறையில் நாட்டின் சமுதாய தேவை மற்றும் குறிக்கோளை அடையவும், வழிகாட்டியாகவும், எண்ணங்களையும் கருத்துக்களையும் வெளிப்படுத்தும் கருவியாக அரசியல் கட்சிகள் செயல்படுகின்றன. மேலும் மக்களுக்கு அரசியல் பாடம் கற்றுக் கொடுத்து சமுதாய பிரச்சினைகளின் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களை ஒன்று திரட்டி அரசியல் மற்றும் தேர்தலில் பங்கேற்கச் செய்வதும் நாட்டின் சமூக பொருளாதார வளர்சிக்காகவும் பாடுபடச் செய்வதே கட்சிகளின் பணியாகும். இப்பணிகளை நிறைவேற்றுவதன் ஊடாக ஜனநாயகத்தை நாட்டில் கட்டியெழுப்பும் உன்னதப் பணியை அரசியல் கட்சிகள் நிறைவேற்றுகின்றன. எனினும் தற்போது இலங்கையில் அரசியல் கட்சிகளில் போக்கினை அவதானிக்கும் போது அவை ஜனநாயகத்தை பேனும் தன்பாதையில் விலகிச் செல்லுவதை காணக்கூடியதாக உள்ளது. இதற்கு பல்வேறு காரணிகளும் செல்வாக்கு செலுத்துகின்றன. கட்சி ஊழல்கள், கட்சி தலைமைகளின் வினைத்திறனற்ற செயற்பாடு கட்சிகள் மக்களுக்கு பொறுப்பு கூறாமை, வெளிப்படைத்தன்மை இல்லாமை, வாக்குறுதிகளை நிறைவேற்றாமை, மக்களுக்கான சேவைகள், நலன்களை நிறைவேற்றுவதில் காணப்படும் மந்தபோக்கு, கட்சி பூசல்கள், முரண்பாடுகள், அதிகார போட்டி, கட்சி தாவல்கள் என பல்வேறு காரணிகளும் தற்போது இலங்கையில் அரசியல் கட்சிகளின் ஜனநாயகத் தன்மையினை கேள்விகுறியாக்கியுள்ளது. எனவே அரசியல் கட்சிகளின் ஜனநாயகத் தன்மையை ஆராய்வதும் அதற்கான காரணங்களை கண்டறிந்து மதிப்பிடுவது அவசியமாகும். இவ்வாய்வானது 2ம் நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்ட பண்புசார் தரவுகள் விபரண அடைப்படையில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றது.

**திறவுச் சொற்கள்**:- ஜனநாயகம், அரசியல் கட்சி, ஐக்கிய தேசிய கட்சி, மக்கள், =லங்கா சுதந்திரக் கட்சி.

## 1. அறிமுகம்

இலங்கையானது ஓர் ஜனநாயக நாடு என்றவகையில் கட்சி முறையிலான ஆட்சி நிலவுகின்றது. அவ்வகையில் பலக் கட்சி முறையினை கொண்ட இவ் ஆட்சி முறையிலே தற்போதைய நடைமுறையிலுள்ள கட்சிகளின் ஜனநாயகத் தன்மையானது கேள்விக்குறியாக காணப்படுகின்றது. இதனை ஆராய்ந்து அளவீடு செய்வதனை நோக்காகக் கொண்டுள்ளது.

## 2. இலக்கிய மீளாய்வு

குணரத்தினம் (2009) என்பவர் எழுதிய 'அரசியற் கட்சிகள் அமுக்கக் குழுக்கள் பொதுசன அபிப்பிராயம்' என்ற நூலில் அரசியற் கட்சிகளின் தோற்றத்தினையும், அதன் வளர்ச்சியினையும் பற்றி விமர்சன ரீதியாக நோக்கப்பட்டுள்ளது.

யோதிலிங்கம் (2008) என்பவர் எழுதிய 'இலங்கையில் அரசியல் கட்சி முறைமை' என்ற நூலில் அரசியல் கட்சிகளின் தோற்றம், கட்சிக்கொள்கைகள் அவற்றிற்கிடையிலான வேறுபாடுகள் என்பன ஆராயப்பட்டுள்ளன.

சிவராஜா (2006) 'இலங்கை அரசியல்' எனும் நூலில் இலங்கையில் அரசியல் கட்சி முறையின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் அரசியல் யாப்புக்களிலும் மதத்தின் செல்வாக்கு என்பன விபரிக்கப்பட்டுள்ளது.

சிறிதரன் பிரசாத் மற்றும் கனேசலிங்கம் (2015) ஆகியோர் மேற்கொண்ட 'சுதந்திரத்திற்கு பின்னரான இலங்கையின் கட்சிகளது தோற்றத்திலும் வளர்ச்சியிலும் மதத்தின் செல்வாக்கு' எனும் ஆய்வானது இலங்கையின் அரசியற் கட்சிகளில் மதத்தின் செல்வாக்கு பற்றி ஆராயப்பட்டுள்ளது. இதற்கு இரண்டாம்

நிலைத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டு அரசியல் யாப்புக்கள், நூல்கள், அறிக்கைகள், இணையத்தள கட்டுரைகள் என்பன பயன்னடுத்தப்பட்டுள்ளன.

### 3. ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது இரண்டாம் நிலைத் தரவுகளைத் அடிப்படையாகக் கொண்டமைகின்றது. இதற்கான தரவுகள் நூல்கள், பருவ இதழ்கள், பத்திரிகைகள், அறிக்கைகள், ஆய்வு கட்டுரைகள் இணையத்தள ஆவணங்கள் போன்றவற்றிலிருந்து பெறப்படுகின்றன. சேகரிக்கப்பட்ட பண்புசார் தரவுகள் விவரண அடிப்படையாக பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

### 4. தரவு பகுப்பாய்வு

பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் பிரதான ஆயுதம் அரசியல் கட்சிகளாகும். பிரித்தானியாவில் பாராளுமன்ற ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 19ம் நூற்றாண்டில் அரசியல் கட்சிகள் ஆரம்பமாகின. இன்று ஜனநாயகத்தின் அடிப்படையே அரசியல் கட்சிகள் காணப்படுகின்றன. ஆட்சியுரிமையைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் அரசியல் கட்சிகள் தமது கொள்கையை மக்கள் மத்தியில் முன்வைக்கின்றன. அரசியல், பொருளாதார, சமூக,கலாசார, வெளிவிவகார, சமூக நலன்புரி முதலிய துறைகளில் தாம் மேற்கொள்ளப்போகும் நடவடிக்கைகள் பற்றி கட்சி கொள்கைகள் விளக்கமளிக்கும். பொதுவாக கட்சிகளின் கொள்கைகளுக்கேற்ப தனது பெறுமதிமிக்க வாக்குகளை தேர்தலின் போது அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளின் படி அரசாங்க கட்சியும் எதிர்கட்சியும் தெரிவு செய்யப்படும்.

அந்தவகையில் இலங்கை கட்சிமுறை வரலாற்றினை பார்க்கும் போது ஆரம்பத்தில் இலங்கையில் சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான இயக்கங்கள் பல தோற்றம் பெற்றிருந்தாலும் பாராளுமன்ற ஜனநாயகத்தை செயல்படுத்தக்கூடிய கட்சிகளாக அவை ஒருங்கடைந்து காணப்படவில்லை 1920 இல் எ.ஈ. குணசிங்காவின் தலைமையில் தொழிலாளர் கட்சி ஆரம்பமானது இவ்வாறு ஆரம்பித்து 1947 ம் ஆண்டாகும் போது லங்கா சமசமாஜக் கட்சி, போல்ஷேவின் லெனின் கட்சி, கொமினிசக் கட்சி தொழிலாளர் கட்சி எனும் பல கட்சிகள் உருவாக்கப்பட்டிருந்தன. மேலும் பின்னர் ஐக்கிய தேசிய கட்சி, = லங்கா சுதந்திர கட்சி, இலங்கை தமிழரசுக்கட்சி என பல்வேறு கட்சிகளும் உருவாக்கப்பட்டன. இலங்கையில் பல்வேறு அரசியல் கட்சிகள் காணப்பட்டாலும் பல தசாப்தங்களாக ஐக்கிய தேசிய கட்சி, இலங்கை சுதந்திர கட்சி ஆகிய இரண்டு முக்கிய கட்சிகளே ஆட்சியில் இருந்து வருகின்றன. தற்போது தேர்தல் முறையில் எந்த ஒரு கட்சியும் நாடாளுமன்ற பெருமாண்மையைப் பெற முடியாத நிலையில் சிறிய கட்சிகளுடன் இப்பெரிய கட்சிகள் கூட்டணி அமைத்து வந்துள்ளன. இக்கட்சிகள் ஜனநாயகத்தை கட்டியெழுப்பும் நோக்குடன் உருவாக்கப்பட்டு இருந்தாலும் அவை ஜனநாயக முறைமைகளை அந்தளவு தூரம் நடைமுறைப்படுத்துகின்றன என்பது கேள்விக்குரியாகும்.

1977 ஆம் ஆண்டில் எட்மன்ட் புர்க்கே என்பவர் எழுதிய thoughts on the caves of the present discontent என்னும் அவரது நூலில் அரசியல் கட்சி என்பது தங்கள் ஏற்றுக்கொண்ட கொள்கையின் அடிப்படையில் தேசிய நலனுக்காக ஒன்றாக உழைக்கும் நோக்கில் ஒன்றுபட்டவர்களின் குழு என்று குறிப்பிட்டுள்ளார். 1816 ஆம் ஆண்டில் பெஞ்சமின கான்ஸ்டன்ட் என்பவரின் கருத்துப்படி கட்சி என்பது ஒரே அரசியல் கொள்கைகளை ஏற்றுகொள்பவர்களின் கூட்டமைப்பு ஆகும். அதே நேரம் மார்கிசவாதிகள் அரசியலை ஒரு வர்க்கப் போராட்டமாக கொள்ளும் தமது அடிப்படைக் கொள்கைகளுக்கேற்ப அரசியல் கட்சிகள் என்பது சமுதாய வர்கத்தினரில் கூனய வர்க்க உணர்வு கொண்டவர்களின் அமைப்பு என்றனர். மெக்ஸ்வெபரின் கருத்துப்படி கட்சி என்பது சுதந்திரமாக சேர்ந்து கொள்தலின் அடிப்படை ஒன்று சேர்த்தலும் இணைந்து செயற்படுதலும் ஆகும். அமைப்பு முறையிலான ஒரு குழுவுக்குள் அடங்கும் அதன் தலைவர்களுக்கும் அதிகாரத்தைப் பெறுவதைப் இதன் இலக்காகவும் கட்சிகள் தீவிரமாக இயங்குபவர்களுக்கு பொருள்சார் நலன்களை பெற்றுக்கொடுப்பதை நோக்கமாகவும் அரசியல் கட்சிகள் கொண்டிருக்கும். அந்தனி டோன்ஸ் என்பவரின் கூற்றுப்படி ஒரு அரசியல் கட்சி என்பது முறையான தேர்தல் முறையொன்றில் பதவிகளை பெறுவதன் மூலம் அரச எந்திரத்தை கட்டுபடுத்த முயலும் மனிதர்கள் குழு என்றார்.

ஜனநாயகத்தின் பிரதான அம்சங்களில் ஒன்றாக மக்களாட்சி கானப்படுகின்றது. அதன்படி மக்களாட்சி வழியிலான அரசியலில் கட்சிகளுக்கு பல்வேறு கடமைகள் உள்ளன. இவை மக்களாட்சி முறையை நிலைத்திரும்பச் செய்யும். அதைச் சிறப்பாக செயற்படவும் பெரிதும் உறுதுணை புரிகின்றன. பொதுவான கொள்கைகளைத் தோற்றுவித்தல், தேர்தலில் பங்கேற்பு மற்றும் போட்டியிடல் மக்களுக்கு கல்வியறிவை புகட்டும் நடவடிக்கையில் ஈடுபடுதல் அரசாங்கத்தை நடத்துதல் மற்றும் விமர்சனம் செய்தல் அரசுக்கும் மக்களுக்கும் இடையே புரிந்துணர்வு ஏற்படுத்துதல், மக்களை ஒன்றுதிரட்டுதல் அல்லது இணைக்கும் அமைப்பாக செயல்படுவது போன்று கடமைகளை அரசியல் கட்சிகள் செய்து வருகின்றன. அவ்வகையில் அடிப்படை ஜனநாயக அம்சங்களை தன்னகத்தே கொண்டு கட்சிகள் செயற்படுகின்றன எனினும் இலங்கையின் தற்கால அரசியல் கட்சிகளின் செயற்பாடுகளை நோக்கும் போது அதன் ஜனநாயகத் தலைமையிலிருந்து விலகிச் செல்லுவதனை அவதானிக்க கூடியதாக உள்ளது. அதில் பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன.

தற்காலத்தில் மதம் அரசியல் கட்சிகளில் அதிகளவிலான செல்வாக்கு செலுத்துவதனை காணக்கூடியதாக உள்ளது. சிங்களம், தமிழ், முஸ்லிம் என இன, மத ரீதியான அம்சங்கள் தற்போது இலங்கை அரசியலில் அதிகளவிலான செல்வாக்கு செலுத்துகின்றன. இலங்கையில் கட்சிகள் உருவாக தனித்துவமான காரணங்கள் அடைந்தாலும் அவை வளர்சியடைய மதம் பிரதான உந்து சக்தியாக அமைந்தது. SWRD பண்டாரநாயக்காவின் தலைமையிலான =லங்கா சுதந்திரகட்சி ஆரம்பத்தில் சிங்கள பௌத்த மக்களின் நலன்களைப் பேணி பாதுகாக்கும் தனிக்கட்சியாக தன்னை இனங்காட்டிக் கொண்டது. இப்பிண்னனியிலேயே =லங்கா சுதந்திரகட்சிகளில் சிங்கள பௌத்தர்களின் ஆதரவு அதிகரிக்க தொடங்கியது. பௌத்த மதத்தின் செல்வாக்கினை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இவ்விருகட்சிகளும் தனது தேர்தல் அறிக்கையிலும், கட்சி கொள்கையிலும் பௌத்த மதத்திற்கு முதன்மை தானம் வழஙகி உள்ளது. இதன் தாக்கம் இன்று கூட தொடர்ந்து வருவதனை அவதானிக்கலாம். மேலும் பௌத்த துறவிகளும் அரசியல் கட்சிகள் மூலம் அரசியலில் ஈடுபடுவதிலிருந்து அரசியல் கட்சியில் மதத்தின் செல்வாக்கினை அறிந்து கொள்ள முடிகின்றது.

மேலும் இலங்கை தமிழ் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, இலங்கை தமிழரசு கட்சி போன்றன இந்து மதத்தினை முதன்மைபடுத்துபவனாக காணப்படுகின்றது. இலங்கை தமிழரசுக்கட்சியின் கொள்கையாக தமிழ் தேசியம் காணப்படுகின்றது. இது தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டது. அதேபோன்று =லங்கா முஸ்லிம் காங்கிரஸ், தேசிய முஸ்லீம் காங்கிரஸ், அகில முஸ்லீம் காங்கிரஸ் போன்றன முஸ்லீம் மக்களின் நலனைப் பேனுவதும் இஸ்லாம் மத்திற்கு ஆதரவான கொள்கைகளினை கொண்டதாகவும் காணப்படுகின்றன. முஸ்லீம் சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்வதற்காக =லங்கா முஸ்லீம் காங்கிரஸ் உருவாக்கப்பட்டது.

இவ்வாறு கட்சிகள் இலங்கை சமூகம் முழுவதற்கும் ஒரு பொது நோக்காக அமையாமல் இன, மத ரீதியான கொள்கைகளையும் நோக்கங்களையும் நலன்களையும் கொண்டு செயற்படுவதனானது அது ஏனைய மதத்தினை பாதிப்பதாக பல சந்தர்ப்பங்களில் காணப்படுகின்றது. எனவே இது மற்ற மதத்தவர்களின் உரிமைகளை மீறுவதாக காணப்படுவதை இன்று அவதானிக்க முடியும். இது ஜனநாயகத்திற்கு முரணானதாகும்.

மேலும் தற்போது அரசியல் கட்சிகள் தமது கொள்கைகளை சரிவர கடைபிடிக்காத நிலையும் மக்களின் நலன்களின் எதேச்சையான போக்கையும் கொண்ட ஒரு நிலமையைக் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அண்மைய காலங்களில் கூட கட்சி செயற்பாடுகளை நோக்கும் போது அது ஜனநாயகத்தின பாதையாக அது காணப்படவில்லை. அரசியல் கட்சிகளும் தலைவர்களும் தேர்தலில் வென்றிருந்தாலும் கூட ஜனநாயக சீர்த்திருத்தம் என்ற வாக்குறுதிகளினை நிறைவேற்றுபவர்களாகவோ அதில் போதியளவு துணிவு, உறுதி பெற்றவர்களாகவோ அல்லது ஓர் அரசியல் சீர்த்திருத்தமொன்றை வளர்த்தெடுக்கும் அரசியல் தேவை கொண்டவர்களாகவோ இலங்கை கட்சி ஊழல்களும், நிலையான ஜனநாயகமாக்கல் மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்புதல் போன்ற செயற்பாடுகளில் கொண்ட அசிரத்தையையுமே காண முடிகின்றது. இதற்கு UNP, SLFA போன்ற கட்சிகள் மட்டுமல்லாது ஏனைய கட்சிகளும் விதிவிலக்கல்ல.

அரசியல் கட்சிகளும் தலைமைகளும் ஜனநாயகத்தை வலுப்படுத்தும் போராட்டத்தில் நம்பத்தகுந்தந்தவைகள் இல்லை என்பது தற்போதைய நிலவரங்களில் அறிய முடிகிறது. அவர்களை பொறுத்தவரை பொதுமக்களின் ஜனநாயக ஆசைகளும் அபிலாசைகளும் வெறும் கொள்கை விழுமியங்களே. தம் கட்சி மீதான தவகைக்குறிப்பும் நம்பிக்கையும் தற்காலிகமானவையாகவும் சந்தர்ப்பம் சார்ந்தவையாக காணப்படுகின்றன.

மேலும் தற்பொழுது கட்சி அரசியல் போட்டி அதிகரித்த நிலை காணப்படுகின்றது. கட்சிக்குள் நிலவும் பூசல்களும் முரண்பாடுகளும் அரசியல் கட்சிகளை பலவீனமாக்கி உள்ளன தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் அமைக்கப்பட்டதிலிருந்து அதன் பிரதான பங்காளிக் கட்சிகளின் அரசியல் வாதிகளிடையே முரண்பாடுகள் தொடர்ந்து வளர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

பொருளாதார கொள்கைகள் என்றாலும் சரி, அபிவிருத்தி திட்டங்கள் என்றாலும் சரி அரசியல் சீர்த்திருத்தங்கள் என்றாலும் சரி இரு கட்சி அமைச்சர்களும் முரண்பட்ட வண்ணமே இருந்தனர். இடையிடையே தங்களது கட்சிகள் தனியாக ஆட்சியையும், யோசனையையும் வெளிப்படுத்த தவறியதில்லை.

மேலும் ஒரு கட்சியின் வெற்றிக்கு பல காரணிகள் செல்வாக்கு செலுத்தினாலும் அக்கட்சியின் தலைமைத்துவமே அக்கட்சியின் ஒழுங்கமைந்த செயற்பாட்டுக்கு பலமாக காணப்படுகின்றது. மேலும் ஒரு கட்சி ஆட்சியை தக்கவைத்துக்கொள்வதும் அதன் வெற்றி, தோல்வி அனைத்தும் கட்சி தலைமைத்துவத்தினாலேயே தீர்மானிக்கப்படுகின்றது. ஒரு கட்சியின் செயற்பாடுகளை நெறிப்படுத்தி செயற்படுவதற்கும் வினைத்திறனான செயற்பாடுகளையும் முன்னோக்கிய பயணத்திற்கும் தலைமைத்துவம் முக்கியமானதாகும். கட்சியானது பொதுஜன அபிப்பிராயத்தை ஒன்றுபடுத்தி திரட்டி அதனை நடைமுறைப்படுத்துவதும் தேசிய ஒருமைபாட்டை வளர்த்தலும் தனது முக்கிய பணியாகும். இதனோடு உறுதியான அரசாங்கத்தை அமைத்தலும் பலமான எதிர்க்கட்சியை உருவாக்குவதும் இதன் பிரதான செயற்பாடாகும். இவ்வாறான செயற்பாடுகளை வெற்றிகரமானதாக செயற்படுத்த கட்சி தலைமைத்துவமானது முக்கியமானதாகும்.

ஒரு கட்சியானது சூழலுக்கு ஏற்ப செயற்பட்டு மக்களின் நலன்களை பேணி சிறந்த கொள்கைகளை வகுத்து செயற்படுமாயின் அக்கட்சியானது நிலைத்து நிற்க கூடிய தொன்றாக காணப்படும். எனினும் தற்போதைய அரசியல் கட்சி தலைமைகளின் தூர நோக்கமற்ற செயற்திறன் போக்கு கட்சியின் செயற்பாட்டை மந்த கதிக்கு உள்ளாக்கியுள்ளது. மேலும் கட்சிகள் மக்களுக்கு கொடுக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றாக தன்மை தற்போதைய அரசாங்கத்தில் காண முடிகின்றது. தேர்தல் விஞ்ஞாபனங்கள், கொள்கை பிரகடனங்களும் வாக்குறுதிகளும் உரிய காலத்தில் நிறைவேற்றப்படுவதை நமது யதார்த்த அரசியல் சூழலில் மிக்ககுறைவாகவே காண்கிறோம். கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் காரியம் முடிந்தால் காற்றில் பறக்க விடப்படும் நிலை சர்வ சாதாரணமாக நடந்து கொண்டு இருக்கிறது. முஸ்லீம், தமிழ் மற்றும் சிறு கட்சிகள் தொடக்கம் பெரும் தேசிய கட்சிகள் மற்றும் ஆட்சியாளர்கள் வரை எல்லா மட்டங்களிலும் இந்த பண்பியல்பைக் காண முடிகிறது. இச்செயல்பாடானது மக்களுக்கு அரசியல் தலைமைகளிடமும் அவர்களது கட்சி செயற்பாடுகளிலும் நம்பிக்கையின்மையை உண்டாக்குகின்றது. மேலும் தேர்தலில் வாக்களிக்கும் சுவாரசியத்தையும் இக்கட்சியின் பொய் வாக்குறுதிகள் இல்லாமல் செய்து விடுகின்றன.

மேலும் மக்களை கட்சி செயற்பாடுகளில், பங்குபற்றுதல் மற்றும் உள்வாங்குதலில் இன்று கட்சிகள் பின் நிற்கின்றன. மக்களுக்கு கட்சி தலைமைகளுடன் பிரச்சினைகளை கலந்துரையாட தெளிவான விதி காணப்படவில்லை. தீர்மானமெடுக்கும் நடவடிக்கைகளில் பங்கெடுக்க வழிகள் இல்லாமல் உள்ளது. அரசியல் கட்சிகளும் புதியோர்களும் தேர்தலில் இடம் ஒதுக்க தயங்குகின்றன. குறிப்பாக இளையோர்கள் பயனற்றவர்கள் மற்றும் வெற்றிபெற முடியாதவர்கள் என இவர்கள் நினைக்கின்றனர். இதனை தவிர்த்து கட்சிகள் இளையோர்களை உள்வாங்கி அவர்களுக்கு அ டிப்படை அரசியல் அறிவை வழங்க வேண்டும்.

## 5. முடிவுரை

தற்கால இலங்கையின் அரசியல் கட்சிகள் பல்வேறு காரணிகளின் தாக்கத்திற்குட்பட்டு தமது ஜனநாயகத் தன்மையை இழந்து வருவதனை எம்மால் அவதானிக்க முடிகின்றது. எனவே இதற்கான தீர்வுகளை கண்டறிவது முக்கியமானதாகும். அதன்படி கட்சி செயற்பாடுகள் ஜனநாயகம் தன்மையுடன் மிளிர வேண்டுமாயின் அதில் மக்களின் பங்களிப்பு அவசியமானதாகும். இளையோருக்காக பங்குபற்றுதலை கட்சிகளில் அங்கீகரிப்பதால் ஊழல் செயற்பாடுகளில் ஈடுபடுவோர்களுக்கு சரியான நடவடிக்கைகள் எடுத்தல், கட்சிகள் மக்களுக்கு பொறுப்பு கூறுவனதாகவும், வெளிப்படைதன்மையினதாகவும், சிறந்த தலைமைத்துவத்தினை கட்சிகள் கொண்டிருப்பதும் முக்கியமானதாகும். மேலும் மத, இன ரீதியான கட்சி செயற்பாடுகளை விடுத்து நாட்டிற்கு ஒரு சேர சேவையாற்றுபனவாகவும், கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுபவையாகவும் கட்சிகள் மாறுவதன் ஊடாக ஜனநாயகத்தன்மையை பேண முடியும்.

## 6. References


1. கீதபொன்கலன், ச (1987), பௌத்த சிங்களவரும் சிறுபாண்மையினரும், செரோ வெளியீடு, சென்னை.
2. குணரத்தினம், வே. (2009), அரசியற் கட்சிகள் அமுக்கக் குழுக்கள் பொதுசன அபிப்பிராயம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
3. சிவராஜா, அ. (2006),இலங்கை அரசியல், குமரன் புத்தக இல்லம், கொழும்பு
4. இலங்கையின் ஜனநாயகம் எதிர்நோக்க இருக்கும் சவால்கள். Retrived from https://maatram.org .
5. இலங்கை நெருக்கடி: படுமோசமான அரசியல் கலாசாரத்திற்ள் நாடு வீழ்ந்து விட்டது. Retrived from www.bbc.com.
6. நீதிமன்ற தீர்ப்பையடுத்து தீவிரமடைந்துள்ள இலங்கை அரசியல் நெருக்கடி. Retrived from www.virakesari.lk